மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 226, 227, 228 ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Assignment of Forest Poramboke Lands*

* 229 Q.—THIRU S. T. ADIYAN (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any representation has been made to the Government requesting the assignment of forest poramboke lands to the Harijans in Kandanur village, Ramanathapuram district for cultivation; and

(b) if so, the action taken by the Government thereon?

### காடு புறம்போக்கு நிலத்தை ஒப்படைப்பு செய்தல்

திரு. எஸ். டி. ஆதித்தன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கண்டனூர் கிராம அரிசனங்களுக்கு காடு புறம்போக்கு நிலத்தை, விவசாயம் செய்ய ஒப்படைப்பு செய்வதற்கு அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அரசு அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) முடிவு எடுக்கப்படவில்லை.

### *Workers of the Salem-Erode Electricity Distribution Company.*

* 230 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Electricity be pleased to state:

(a) whether it is a fact that the striking electricity workers of the Salem-Erode Electricity Distribution Company resorted to sabotage during August, 1973; and

(b) if so, the action taken thereon?

1974 மார்ச் 27]

## சேலம்-ஈரோடு மின் பங்கீட்டு நிறுவன ஊழியர்கள்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வேலே நிறுத்தம் செய்த சேலம்-ஈரோடு மின் வழங்கு நிறுவன ஊழியர்கள் 1973-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்களில் நாச வேலேயில் ஈடுபட்டனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலேவரவர்களே, (அ) 16—8—73-லிருந்து 4—9—73 வரை சேலம்-ஈரோடு மின் பங்கீட்டு நிறுவன ஊழியர்கள் வேலே நிறுத்தம் செய்தபோது பல சேதங்கள் ஏற்பட்டன.

(இ) பின்னல் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமுகமான சூழ்நிலே ஏற்பட்டுவிட்ட காரணத்தால், மாவட்ட ஆட்சித் தலேவருடைய ஆலோசனேப்படி வழக்கு திரும்பப் பெறப்பட்டது.

திரு. எல். பலராமன் : தலேவரவர்களே, இதனல் எவ்வளவு பொருள்கள் சேதமடைந்தன ; அந்தச் சேதத்தை விளேவித்த தொழிலாளர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்களென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலேவரவர்களே, தொழிலாளர்களும், நிர்வாகத்தினரும் பேசி இடையிலே ஒரு சுமுகமான சூழ்நிலே ஏற்பட்டுவிட்டதால், ஏற்கெனவே சொன்னதுபோல, மாவட்ட ஆட்சித் தலேவர் ஆலோசனேப் படி வழக்கு திரும்பப் பெறப்பட்டது. ஆனல் கிளர்ச்சி நடந்த நேரத்தில், விவசாயிகளின் நீர் விசை ஏற்றங்களுக்கு மின் இடர்பாடு ஏற்பட்டது. சில இடங்களில் கம்பிகள் அறுக்கப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் தலேவர் : வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]